சாங்கத்தில் முடிவு செய்யப்பட்டிருக்கிறது. அந்த நிலங்களை குத்தகைக்குக் கொடுத்துச் சாகுபடி செய்ய வேண்டுமென்பது முறைப்படி கவனிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினக்கள் விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி * இடப்பட்டிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்]

2. **நடை முறைக் கேள்விகள்.**—(அ) முதலமைச்சரின் உடல் நிலை.

THIRU K. VINAYAKAM: On a point of Order, Sir, Yesterday we read in the papers that our beloved Chief Minister is suffering from diarrohoea and that he has cancelled his engagements even to participate in Republic Day celebrations and to my horror I find that he is not here today in this House. May I know what is his present condition? I am interested in the Chief Minister. Will the Hon. Leader of the House make a statement regarding Chief Minister's health, whether he will come here tomorrow or not, because Governor's Address is being discussed here and it is he who has got to reply to the discussion on the Governor's Address.

DR. H. V. HANDE: I object to the word "horror" used by the hon. Member Thiru K. Vinayakam.

THIRU K. VINAYAKAM: Sir, the Hon. Chief Minister is always punctual. His presence is taken for granted. There is not even one day when he has not been present in this House. He has not come today. I am upset. "நான் திடுக்கிடுகிறேன்" The word is not offensive. The word "horror" is not an unaccepted word.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய உடல் நிலை பற்றிய செய்திகள் நேற்றைய செய்தித் தாள்களில் வந்தன. நேற்றைக்கு முன் தினம் டயரியாவால் பாதிக்கப்பட்ட பலஹீனத்துடன் இருந்தார்கள். மருத்துவர்கள் தக்க நேரத்தில் வந்து தக்க மருத்துவ சிகிச்சை அளித்ததன் காரணமாக உடல் நிலை தேறி இன்று ஓய்வு பெற்று வருகிறார்கள். நாளை மன்றத்திற்கு வரலாமென்ற நிலையில் இருக்கிறார்கள். இப்போது ஓய்வு எடுத்துக்கொண்டு வருகிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சட்டப் பேரவை விதி 41 (3)ஐ தளர்ந்த வேண்டுமென்ற ஒரு தீர்மானத்தை அவை முன்னவர் அவர்கள் கொண்டுவருவார்கள்.

(ஆ) ஒற்றிவைப்புத் தீர்மானம் மீதான முடிவு குறித்து

DR. H. V. HANDE: On a point of order, Sir; there are a large number of cycle-rickshaws outside about which I have given an adjournment motion. May I know what is the dis-disposal.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பாயின்ட் ஆப் ஆர்டர் என்ன என்று முதலிலே சொல்லுங்கள். அதற்குப் பிறகு செய்திக்குப் போகலாம். அட்ஜார்ன்மென்ட் மோஷன் கொடுத்ததாகச் சொன்னீர்கள். இதுவரை என்னிடம் ஒன்றும் வரவில்லை. அட்ஜார்ன்மெண்ட் மோஷன் வராததற்குப் பாயின்ட் ஆப் ஆர்டர் எழுப்புவது கூடாது. இதற்கு விளக்கம் கொடுக்கும் முறை கிடையாது.

DR. H. V. HANDE: This is an emergency. Will you take it has not yet reached you, Sir.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் காலை எட்டரை மணிக்கு வந்து என்னுடைய அறையில் உட்காருகிறேன். ஒன்பது மணி வரையில் அறையிலேயே தானிருந்தேன். உங்களுடைய அட்ஜார்ன் மென்ட் மோஷன் அதுவரை வரவில்லை.

DR H. V. HANDE: I have given it to the Secretary but up the matter with the Secretary as to why it has not yet been given to you?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அது வேறு விஷயம்.

3. அரசினர் தீர்மானங்கள்

(அ) விதி 41 (3) ஐ தளர்த்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இப்போது மாண்புமிகு அவை முதல்வர் அவர்கள் விதி 41 (3) ஐ தளர்த்த வேண்டுமென்ற தீர்மா னத்தைக் கொண்டு வருவார்கள்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ் நாடு சட்டப் பேரவை விதி 41 (3)-ன் கீழ் ஒரு கூட்டத்தில் இரண்டுக்கு மேற்பட்ட காரியங்களைக் கொண்டு வரக் கூடாது என்கிற விதியைத் தளர்த்த வேண்டுமென்று முன் மொழி கிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

4. கவன ஈர்ப்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, முதல் அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு திரு. கரு. சிமைச்சாமி அவர்கள் ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானத்தைக் கொண்டு வருவார்கள். அவர்கள் சபைக்கு வரவில்லை. அடுத்து, புலவர் பொ. பொன்னம்பலம் அவர் கள் நிதியமைச்சர் அவர்களின் கவனத்திற்கு ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானத்தைக் கொண்டு வருவார்கள்.